பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 09 2025 SATURDAY 7.15 PM
ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. அம்ரித் பாரத் திட்டத்தின் மூலம், நாட்டில் உள்ள ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. சுற்றுலாத் தலங்களின் இணைப்புக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

4. ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு பிரிக்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

5. உலகக்கோப்பை ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியா இன்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

*பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

<<<<<<>>>>>>

அம்ரித் பாரத் திட்டத்தின் மூலம், நாட்டில் உள்ள ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் சூரத் Udhna ரயில் நிலையத்தை இன்று பார்வையிட்ட அவர், நவீன வசதிகளுடன் கொண்ட புதிய நடைமேடைகள் அமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

புல்லட் ரயில் திட்டத்தின் முதல் கட்டம் சூரத் - Bilimora இடையே தொடங்கப்படும் என்று திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சுற்றுலாத்துறையின் தொலைநோக்கு பார்வையில் சுற்றுலாத் தலங்களின் இணைப்புக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய சுற்றுலாத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக சுற்றுலா தின மாநாட்டில் உரையாற்றிய அவர், உடான் திட்டம் போன்ற அரசின் திட்டங்கள் மூலம் சுற்றுலாத் தலங்களை இணைத்துள்ளதாக கூறினார்.

பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்கு நம் நாட்டு மக்கள் செல்வதற்காக உள்நாட்டு சுற்றுலா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறிய அமைச்சர், பிரசாத் திட்டம் மூலம் புனித தலங்களின் மேம்பாடு உறுதி செய்யப்படுவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய நித்தி ஆயோக் துணைத்தலைவர் திரு Suman Berry, பொருளாதார மாற்றங்களுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும், சமூக மாற்றங்களுக்கும் சுற்றுலாத்துறை மிக முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

சுற்றுலா மற்றும் நிலையான மாற்றம் என்பதே இந்த ஆண்டின் உலக சுற்றுலா தினத்தின் கருப்பொருளாகும்.

<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற கூட்டணி கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

சமஸ்திபூரில் தேர்தல் தொடர்பான உத்திகள் குறித்து தமது கட்சித் தலைவர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

இதில் மத்திய இணையமைச்சர்கள் திரு நித்தியானந்த ராய், திரு ராஜ்பூஷன் சௌதிரி, பீகார் மாநில பிஜேபி தலைவர் திரு திலீப் ஜெய்ஸ்வால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

<<<<<<>>>>>>

ஐ நா பாதுகாப்பு சபையில் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் பங்கை உறுதி செய்ய வேண்டும் என்று ஜி-4 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐ நா-வில் ஜி-4 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர்டாக்டர் ஜெய்சங்கர், பிரேசிலின் Mauro Vieira, ஜெர்மனியின் Johann, ஜப்பானின் Iwaya Takeshi ஆகியோர் இதுதொடர்பாக ஆலோசனை மேற்கொண்டனர்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஜி-4 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள், ஐ நா பாதுகாப்பு சீர்திருத்தத்தை வலியுறுத்தியதாக கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

இதனிடையே, ஐ நா பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர்களாக இந்தியாவையும், ஜப்பானையும் சேர்க்க பூட்டான் ஆதரவு அளிப்பதாக அந்நாட்டு பிரதமர் Tshering Tobgay தெரிவித்துள்ளார்.

ஐ நா பொதுச்சபையில் உரையாற்றிய அவர், ஐ நா சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, ஐ நா பாதுகாப்பு சபையில் கூடுதல் உறுப்பு நாடுகளை சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு பிரிக்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நியூயார்க்கில் நடைபெற்றுவரும் ஐ நா பொதுச்சபை கூட்டத்தின் ஒரு பகுதியாக, பிரிக்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

பின்னர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட்டு தீவிரவாதத்தை முறியடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

<<<<<<>>>>>>

பிரிக்ஸ் அமைப்பு பல்துறை வர்த்தகத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

ஐ நா பொதுச்சபை கூட்டத்தின் ஒரு பகுதியாக பிரிக்ஸ் அமைப்பு வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் கலந்துரையாடிய பின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு பிரிக்ஸ் அமைப்பு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

உலக அமைதியை நிலைநாட்டவும், சர்வதேச சட்ட விதிகளை உலக நாடுகள் பின்பற்றுவதை உறுதிசெய்யவும் பிரிக்ஸ் அமைப்பு தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்றும் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

*சரக்கு போக்குவரத்தில் தமிழகத்தின் தூத்துக்குடி வ உ சிதம்பரனார் துறைமுகம் முன்னிலை வகித்து வருகிறது.*

*இதுகுறித்து எமது தூத்துக்குடி செய்தியாளர் தரும் தகவல்.*

*(Sound Byte – லஷ்மணன் –55 Sec.)*

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் மும்பை, தானே உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை

பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலோர மாவட்டங்களான ரத்னகிரி, சிந்துதுர்க் உள்ளிட்ட மாவட்டங்களிலும் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

உலக பாரா தடகள சாம்பியன் போட்டிகள் தில்லியில் நடத்துவது இந்தியாவுக்கு பெருமை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அனைத்து வீரர், வீராங்கனைகளையும் வரவேற்பதாக கூறியுள்ளார்.

இந்த போட்டிகள் மூலம் உலக அளவில் விளையாட்டு கலாச்சாரம் மேம்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

*உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியா இன்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் Skeet பிரிவில் Raiza Dhillon வெள்ளிப்பதக்கத்தையும், Mansi Raghuvanshi வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

-----------------

*உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.*

*தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்ற இப்போட்டியின், மகளிர் பிரிவில் Sheetal Devi-யும், ஆடவர் பிரிவில் Toman-னும் தங்கப்பதக்கத்தை வென்றனர்.*

*இப்போட்டியில் ராகேஷ்குமார் வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*கலப்பு இரட்டையர் பிரிவில் Sheetal Devi - Toman இணை வெண்கலப்பதக்கம் வென்றது.*

*இந்தியா இப்போட்டியில் 3 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலம் உட்பட ஏழு பதக்கங்களை வென்றது.*

----------

*துருக்கி சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Madhurima Sawant – அமெரிக்காவின் Savannah Broadus இணை பட்டம் வென்றது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 7-6, 6-3 என்ற செட் கணக்கில், துருக்கியின் Selina Atay – யுக்ரைனின் Mariia Bergen இணையை வென்றது.*

------

*சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhattacharjee பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

---------

Canberra –வில் நடைபெற்ற 21 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஹாக்கிப் போட்டியில் ஆஸ்திரேலியா 5-0 என்ற கோல்கணக்கில் இந்தியாவை வென்றது.

இந்த தொடரில் ஆஸ்திரேலியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இருஅணிகளுக்கு இடையேயான மூன்றாவது போட்டி நாளை மறுநாள் நடைபெறுகிறது.

<<<<<<END>>>>>>